**செய்தி வெளியீடு எண்: 522** **நாள்: 06.08.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (6.8.2018) தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம் – பூனாச்சியில் 10 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் 9 மாவட்டங்களில் 70 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 10 துணை மின் நிலையங்கள் மற்றும் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டத்திற்கான மேற்பார்வை பொறியாளர் அலுவலகக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன் மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம் – பூனாச்சியில் 10 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் – மாங்காட்டில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் திருமுக்கூடலில் 33/11 கி.வோ.துணை மின் நிலையம்; தஞ்சாவூர் மாவட்டம் – பூண்டியில் 110/33 கி.வோ. துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்); திருப்பூர் மாவட்டம் – ஊத்துக்குளியில் 110/33 கி.வோ. துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்); அரியலூர் மாவட்டம் – அய்யூரில் 33/11 கி.வோ.துணை மின் நிலையம்; நாகப்பட்டினம் மாவட்டம் – நரிமணத்தில் 110/33/11 கி.வோ.துணை மின் நிலையம்;

இராமநாதபுரம் மாவட்டம் – உப்பூரில் 110/33/11 கி.வோ.துணை மின் நிலையம்; புதுக்கோட்டை மாவட்டம் – புனல்குளத்தில் 110/33 கி.வோ.துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்); திருவண்ணாமலை மாவட்டம் – வரகூரில் 33/11 கி.வோ.துணை மின் நிலையம்; சேலம் மாவட்டம் – கொளத்தூரில் 110/33/11 கி.வோ.துணை மின் நிலையம், என 70 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 10 துணை மின் நிலையங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரியில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 85 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 11 துணை மின் நிலையங்கள் மற்றும் கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி. கருப்பணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் திரு.பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**